Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 373/2018 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சூர்யா, முதல்நிலைக் காவலர் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 17th September 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது ஆழியார் காவல்நிலையத்தில் முதல்நிலைக் காவலராக பணியாற்றி வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா அவர்களின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன்.

கடந்த 12.07.2018 ம் தேதி மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது, கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வடிவேல் என்பவரிடம் 11.00 மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலையக் குற்ற எண்.115/2018, 294(பி), 324, 506(2) இ.த.ச. மற்றும் Sec.4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பின்னர் அன்றைய தினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் சிதம்பரம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** மற்றும் மாதிரி வரைபடம் **அசாஆ.6** ஆகும்.

பின்னர் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட உடைந்த செங்கல் ஒன்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட வடிவேல் மற்றும் முருகம்மாள் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முருகேசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்களை பெற்றுள்ளார். அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.8** மற்றும் **அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.10** ஆகும். பின்னர் இவ்வழக்கின் எதிரியை கைது செய்யும் பொருட்டு தேடிக் கொண்டிருந்தபோது, தகவலாளி கொடுத்த தகவலின் பேரில் கம்பாலப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டிருந்த எதிரியை பிடித்து

விசாரிக்க தனது பெயர் விலாசங்களை கூறி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 17.30 மணிக்கு கைது செய்து, எதிரியுடன் நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் இத்துடன் அவரது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi